
சூரியனுக்கு அருகில் பறந்து சென்ற சிறுவன்

லிஸில் வீல்

தமிழில் கிருஷ்ணன்



சூரியனுக்கு அருகில் பறந்து சென்ற சிறுவன்

லிஸில் வீல்

தமிழில் கிருஷ்ணன்








முன்னொரு காலத்தில் பண்டைய கிரேக்க நாட்டில்
இக்காரசு என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான்.
வாழ்கை முறை வேறாக இருந்தாலும் பிள்ளைகள்
இப்போது போலவே குறும்பு
செய்பவர்களாகவே இருந்தனர்.

இக்கராசு அவன் அப்பாவுடன் ஒரு தீவில் வாழ்ந்து வந்தான்.








அவனுடைய அப்பா ஒரு சிறந்த கண்டுபிடிப்பாளர்
அவர் எல்லா வகையான கருவிகளும், பொம்மைகளும்
செய்பவராக இருந்தார்.



பாய்மரத்தினால் செல்லக்கூடிய படகை முதலில் கண்டுபிடித்தவர் அவர். அதில் இக்காரசை அழைத்து கொண்டு படகோட்டி செல்வார்.



ஒரு முறை
இக்காரசின் தந்தை
விந்தையான ஒரு கருவியை
கண்டுபிடித்தார்.



பலகையினால் ஒரு
சட்டகத்தை செய்தார்.



பின்னர் எல்லா வகை
சிறகுகளையும் அவர்
சேகரித்தார்.



அதை அந்த சட்டகத்தில் மெழுகை
கொண்டு அச்சிறகுகளை ஒட்டினார்.



பறப்பதற்கான இறக்கைகளை உருவாக்கினார்.




இப்போது பறவையை போல அவரால் பறக்க முடியும்.

அந்த இறக்கைகள் சிறப்பாக
அமைந்ததினால் அவர் மகனுக்கும் சிறிய
அளவில் ஒன்றை செய்து கொடுத்தார்.
இப்போது இக்கராசும் பறக்க முடியும்.




ஒவ்வொரு நாளும் இக்கராசும் அவர் தந்தையும் கடல் மீது பறந்து பயிற்சி செய்வார்கள். அது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.





இப்படி தினமும் பறக்கும் சமயத்தில் இக்காரசு ஒன்றை கவனித்தான். சிறிய பறவைகள் கூட அவர்களை விட உயரமாக பறக்க கூடியவையாக இருந்தது.
“அப்பா இந்த பறவைகளை விட உயரமாக எனக்கு பறக்க வேண்டும்” என்றான் இக்காரசு. எனக்கு தெரியும் “அது என்னால் முடியுமென்று”
ஆனால் அவன் தந்தை அவனை அனுமதிக்கவில்லை.
“சூரியனோ மிகவும் வெப்பமானது, கடலோ மிகவும் ஆழமானது” என்றார்.
“மிகவும் கவனமாக இருக்க வேண்டும்” என்றார்.



ஒவ்வொரு நாளும் இக்காரசை அவனது தந்தை எச்சரித்து கொண்டேஇருந்தார்.

“உயரமாக பறக்காதே இல்லையென்றால் சூரியனின் வெப்பக்கதிர்கள் இறக்கைகளை ஓட்ட வைத்திருக்கும் மெழுகை கரைத்து விடும்.”



ஒரு நாள் விடியற்காலை இக்காரசின் அப்பா தூங்கி கொண்டிருக்கும் போது அவன் வீட்டிலிருந்து அவருக்கு தெரியாமல் நழுவி சென்றான்.



இக்காரசு தனது இறக்கைகைகளை கட்டிக்கொண்டு குளிர்ந்த நீல வானில் சிறகடித்து பறந்தான். மகிழ்ச்சியாக உணர்ந்தான். காற்றில் சில குட்டி காரணங்களை அடித்தான்.

பறவைகள் தனக்கு மேலே உயரத்தில் பறப்பதை கவனித்தான். “நானும் பறவைகளை விட உயரத்தில் பறக்க முடியும்” என்று எண்ணினான். தன் அப்பா எச்சரித்ததை மறந்து போனான்.



சிறகடித்து மேலே மேலே அடித்து பறந்தான். என்ன ஒரு ஆனந்தம் அவனுக்கு. சீக்கிரமே அவன் எல்லா பறவைங்களையும் தாண்டி மேலே சென்று விட்டான். மேலே செல்ல செல்ல வெப்பம் கூடுவதை அவன் உணரவே இல்லை.

!

இக்கராசு மிக உயரத்தில் பறந்து கொண்டிருந்தான்.




மெல்ல மெல்ல சூரியனின் ஒளி கதிர்களிலிருந்து வரும் வெப்பம் அவனுடைய இறக்கைகளை ஒட்டி பிடித்திருந்த மெழுகை உருக்கி கொண்டிருந்தது.
இறக்கைகள் விழ ஆரம்பித்து விட்டன.
அதோடு இக்கராசும் விழுந்தான். அவன் சிறகுகள் விழ இக்கராசு ஆழ் கடலில் விழுந்தான்.



அப்பா, அப்பா என்னை காப்பாற்றுங்கள்! என்று கத்தினான்.
"நான் உங்கள் பேச்சை தட்ட மாட்டேன்!"
ஆனால் அப்போது அவனுக்கு உதவ அப்பா அவனருகில் இல்லை. இக்காரசு கடலில் விழுந்தான்.



விளையாட்டு வினையாகி போனது.



அவனுடைய அழுகை அவன்
அப்பாவை எழுப்பியது. அவர்
இக்கராசை எல்லா இடத்திலும்
தேடினார்.ஆனால் அவனை
எங்கும் காணவில்லை.

அவருக்கு கிடைத்ததெல்லாம்
கடலின் அலையில் மிதந்து
கொண்டிருக்கும் இறக்கைகள் தான்.



இன்றும் மக்கள் இக்கராசின் “சூரியனுக்கு அருகில் பறந்து சென்ற சிறுவன்” கதையை புது சந்ததியினருக்கு சொல்லி கொன்டு தான் இருக்கிறார்கள். அவன் எந்த கடலில் விழுந்தானோ அதன் பெயர் இக்காரியன் கடல் என்று அழைக்கப்படுகிறது.



இந்த பிரபலமான கதை கற்பனையாக கூட இருக்கலாம். இது உண்மையாக நடந்த சம்பவம் என்றும் சிலர் கூறுகின்றனர்.

முற்றும்